# தாதியருக்கான முனைவர் பட்டப்படிப்பு அறிமுகம்

மூப்படையும் மக்கள்தொகை அதிகரிக்கும் நிலையில், சிக்கலான சுகாதாரப் பராமரிப்புச் சவால்களைச் சமாளிக்க தாதியரைத் தலைமைத்துவப் பொறுப்புகளுக்குத் தயார்ப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அவற்றின் ஒரு பகுதியாக தாதிமைப் பயிற்சிக்கான முனைவர் படிப்பைச் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (NUS) தொடங்கியுள்ளது. சிங்கப்பூரில் அத்தகைய முனைவர் பட்டத்திற்கான படிப்பு தொடங்கப்படுவது இதுவே முதன்முறை.

'தாதிமைப் பயிற்சி முனைவர்' என்னும் ஈராண்டு பகுதி நேரப் படிப்பு, சுகாதாரப் பராமரிப்பு முறை ரீதியிலான முன்னேற்றத்தை வழிநடத்தவும், சுகாதாரக் கொள்கையை ஊக்குவிக்கவும் தாதியருக்கு அதிகாரமளிக்கும். அத்துடன், தங்களது மருந்தகப் பணியில் ஈடுபட்டவாறே தாதியர் பராமரிப்புச் சேவை வழங்குவதை அந்தப் படிப்பு மேம்படுத்தும். அந்தப் படிப்பின் தரம் அனைத்துலகத் தரத்தோடு ஒத்திருக்கும்.

முனைவர் படிப்புக்கான திட்டத்தை வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 1) தொடங்கி வைத்துப் பேசிய சுகாதார அமைச்சரும் சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சருமான ஓங் யி காங் இந்த விவரங்களை வெளியிட்டார்.

சுகாதாரப் பராமரிப்புக்கான தேவைகள் அதிகரித்து வரும் நிலையிலும் உலகளாவிய தாதியர் பற்றாக்குறை நிலவும் வேளையிலும் தாதியரை வேலைக்கு எடுத்து அவர்களைத் தக்கவைத்துக்கொள்வது சிங்கப்பூருக்கு முக்கியமானது என்றார் அவர்.

தாதியர் தினத்தையொட்டி, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தில் உள்ள தாதிமைப் படிப்புக்கான ஏலிஸ் லீ மையம் தனது 20வது ஆண்டு விழாவை வெள்ளிக்கிழமை கொண்டாடியது.